Abolition of capital punishments

* 127 Q.—Thiru N. DENNIS :

Thiru P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased state—

(a) whether the Union Government has sought the views of the State Government on the question of abolition of capital punishments: and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இல்லை. ஆனால், இப்பொருள் குறித்து சட்ட ஆணைக்குழு செய்திருக்கும் பரிவுரைகள் மாநில அரசால் பரிசீலிக்கப்பட்டன. மரண தண்டனை ஒழிக்கப்படக் கூடாது என்று சட்ட ஆணைக்குழு செய்திருந்த பரிவுரையை இந்த அரசு ஏற்றுக்கொண்டது.

திரு. என். டென்னிஸ் : லைஃப்க்கு லைஃப் என்றிருப்பதை விட ரெஃபர்மேட்டரி ஃபனிஷ்மென்டை செயல்படுத்தும் முறைபற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தண்டனை பெற்றதற்குப் பின்னால்தான் அந்தக் கைதிகளை எப்படிச் சீர்திருத்துவது என்பது பற்றிப் பரிசீலிக்கப்படும். இப்போதுள்ள சட்டப்படி ஆயுள் தண்டனை யும் இருக்கலாம், மரண தண்டனையும் இருக்கலாம். மரண தண்டனை நீக்கப்படக்கூடாது என்ற கருத்துத்தான் இன்று நிலவி வருகிறது.

திரு. எம். தேவராசன் : நேற்று ராஜ்ய சபாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள மசோதாவில் மரண தண்டனை இருக்கும், ஆனால் எக்ஸ்ட்ரீம் கேஸ்களில்தான் இருக்கும். மற்றபடி இருக்கக் கூடாது என்ற முறையில் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை வைத்துக்கொண்டு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஒரு செய்தி வந்துள்ளது. இப்போதுள்ள சட்டப்படியே எல்லாக் கொலைகளுக்கும் மரண தண்டனை கொடுக்க வேண்டும் என்பதல்ல. இப்போதுள்ள சட்டப் படியே ஆயுள் தண்டனை கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அதைச் சற்று விரிவுபடுத்தும் கருத்துடன்தான் அந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.